©
தமிழ்நாடு அரசு
2022

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை: ரூ. 6.40 காசு

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 33]
சென்னை, புதன்கிழமை, ஆகஸ்ட் 17, 2022
ஆவணி 1, சுபகிருது, திருவள்ளுவர் ஆண்டு–2053

## பகுதி II—பிரிவு 2 இன் இணைப்பு

## அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்

### வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை

**அறிவிக்கைகள்**

*[அரசாணை (நிலை) எண் 117, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி [UD4–(2)]த் துறை, 16 ஜூன் 2022.]*

தமிழ்நாடு 1971ஆம் ஆண்டு நகர் ஊரமைப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 10ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவில் (b) பகுதியில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள் 29.06.1983ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II–பிரிவு 2 இல் 505 மற்றும் 506 ஆம் பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் II(2)/வீ.வ/3481/83ஆம் எண் அறிவிக்கையில் உள்ளூர் திட்டமிடல் பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ள பவானி நகராட்சியை உள்ளடக்கிய பவானி உள்ளூர் திட்டமிடல் பகுதியில் பின்வரும் வருவாய் கிராமங்களின் பகுதிகளை சேர்ப்பதற்கான அவருடைய நோக்கத்தை இதனால் அறிவிக்கிறார். அதாவது:–

| | "வருவாய் கிராமங்களின் எண் மற்றும் பெயர் |
|---|---|
| 20. | ஒலகடம் |
| 17. | கல்பாவி |
| 21. | குறிச்சி |
| 14. | படவல்கால்வாய் |
| 13. | சிங்கம்பேட்டை |
| 15. | காடப்பநல்லூர் |
| 16. | கேசரிமங்கலம் |
| 5. | சன்னியாசிப்பட்டி |
| 57. | வரதநல்லூர் |
| 29. | தாளகுளம் |
| 3. | ஊராட்சிக்கோட்டை |
| 2. | ஆண்டிக்குளம் |
| 1. | பவானி |
| 56. | மயிலம்பாடி |
| 18. | பருவாச்சி |
| 55. | புன்னம் |

| | "வருவாய் கிராமங்களின் எண் மற்றும் பெயர் |
|---|---|
| 45. | ஆப்பக்கூடல் |
| 54. | ஓரிச்சேரி |
| 53. | ஜம்பை (ந.நி) |
| 52. | சின்னபுலியூர் |
| 51. | வைரமங்கலம் |
| 22. | பெருந்தலையூர் |
| 23. | பி. மேட்டுப்பாளையம் (T.P) |
| 39. | ஓடத்துறை |
| 46. | கவுந்தப்பாடி |
| 47. | சலங்கபாளையம் (T.P) |
| 50. | ஆலத்தூர் |
| 48. | செட்டிபாளையம் |
| 49. | பெரியபுலியூர் |

.,,

2. இந்த அறிவிக்கை, ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்பட்ட நாளிலிருந்து இரண்டு திங்கள் கால அளவிற்குள் மேற்சொன்ன பகுதிகளிலுள்ள யாதொரு குடியிருப்பாளர் அல்லது யாதொரு உள்ளூர் அதிகார அமைப்பு அல்லது நிறுவனம் அவ்வாறு சேர்ப்பதற்குக் கருதப்பட்டுள்ள பகுதிகள் குறித்த யாதொரு மறுப்புரை அல்லது கருத்துரையை எழுத்து வடிவில் அரசிடம் அளிக்கலாம். மேற்சொன்ன கால அளவு முடிவடைவதற்குள் பெறப்படும் மறுப்புரைகள் அல்லது கருத்துரைகள் (எவையேனுமிருப்பின்), மேற்சொன்ன சட்டத்தின் 10ஆம் பிரிவைச் சேர்ந்த (4) உட்பிரிவிற்கிணங்க மேற்கொண்டும் நடவடிக்கை எடுப்பதற்கு முன்னர் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். மறுப்புரைகள் அல்லது கருத்துரைகள், 'அரசு முதன்மைச் செயலாளர், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, தலைமைச் செயலகம், புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை—600 009' என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

*[அரசாணை (நிலை) எண் 119, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி [ந.வ4—(2)]த் துறை, 16 ஜூன் 2022.]*

தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர் ஊரமைப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 10 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவில் (b) பகுதியில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள் 31.01.1996 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II—பிரிவு 2 இல் 71ஆம் பக்கத்தில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் II(2)/வீ.வ/218/96 ஆம் எண் அறிவிக்கையில் உள்ளூர் திட்டமிடல் பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ள திருத்துறைப்பூண்டி நகராட்சி பகுதியை உள்ளடக்கிய திருத்துறைப்பூண்டி உள்ளூர் திட்டமிடல் பகுதியில் பின்வரும் வருவாய் கிராமங்களின் பகுதிகளை சேர்ப்பதற்கான அவருடைய நோக்கத்தை இதனால் அறிவிக்கிறார். அவையாவான:—

| | "வருவாய் கிராமங்களின் எண் மற்றும் பெயர் |
|---|---|
| | **திருத்துறைப் பூண்டி வட்டம்** |
| 29. | வேளூர் |
| 38. | பாமணி |
| 53. | கட்டிமோடு |
| 35. | நெடும்பலம் |
| 30. | தீவம்மாபுரம் |

.,,

2. இந்த அறிவிக்கை, ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்பட்ட நாளிலிருந்து இரண்டு திங்கக்குள் மேற்சொன்ன பகுதிகளிலுள்ள யாதொரு குடியிருப்பாளர் அல்லது யாதொரு உள்ளூர் அதிகார அமைப்பு அல்லது நிறுவனம் அவ்வாறு சேர்ப்பதற்குக் கருதப்பட்டுள்ள பகுதிகள் குறித்த யாதொரு மறுப்புரை அல்லது கருத்துரையை எழுத்துப்பூர்வமாக அரசிடம் அளிக்கலாம். மறுப்புரைகள் அல்லது கருத்துரைகள், எவையேனுமிருப்பின் அவை மேற்சொன்ன கால அளவு முடிவடைவதற்கு முன்னர் பெறப்படுமாயின் மேற்சொன்ன சட்டத்தின் 10—ஆம் பிரிவைச் சேர்ந்த

(4) உட்பிரிவிற்கிணங்க மேற்கொண்டும் நடவடிக்கை எடுப்பதற்கு முன்னர் கருத்தில் எடுத்துக் கொள்ளப்படும். மறுப்புரைகள் அல்லது கருத்துரைகளை எழுத்துப்பூர்வமாக, 'அரசு முதன்மைச் செயலாளர், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, தலைமைச் செயலகம், புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை—600 009' என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

*[அரசாணை (நிலை) எண் 123, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி [ந.வ4—(2)]த் துறை, 22 ஜூன் 2022.]*

தமிழ்நாடு 1971ஆம் ஆண்டு நகர் ஊரமைப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 10ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவில் (b) பகுதியில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள் 10.04.1974 ஆம் நாளிட்ட ***தமிழ் நாடு அரசிதழின்*** பாகம் II—பிரிவு 2 இல் 210ஆம் பக்கத்தில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறையின் II(2)/ஊ.வ.உ/2025/74 ஆம் எண் அறிவிக்கையில் உள்ளூர் திட்டமிடல் பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ள ஆரணி வருவாய் கிராமங்களை உள்ளடக்கிய ஆரணி உள்ளூர் திட்டமிடல் பகுதியில் பின்வரும் வருவாய் கிராமங்களின் பகுதிகளைச் சேர்ப்பதற்கான அவருடைய நோக்கத்தை இதனால் அறிவிக்கிறார். அவையாவன:—

| | "வருவாய் கிராமங்களின் எண் மற்றும் பெயர் |
|---|---|
| 20. | முல்லிபட்டு |
| 21. | சேவூர் |
| 22. | ரத்தினமங்களம் |
| 27. | இரும்பேடு |
| 28. | சத்திய விஜயநகரம் |
| 33. | மாமண்டூர் |
| 34. | கல்பூண்டி |
| 35. | பையூர் |
| 36. | வெலபாடி" |

2. இந்த அறிவிக்கை, ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்பட்ட நாளிலிருந்து இரண்டு திங்கள் கால அளவிற்குள் மேற்சொன்ன பகுதிகளிலுள்ள யாதொரு குடியிருப்பாளர் அல்லது யாதொரு உள்ளூர் அதிகார அமைப்பு அல்லது நிறுவனம் அவ்வாறு சேர்ப்பதற்குக் கருதப்பட்டுள்ள பகுதிகள் குறித்த யாதொரு மறுப்புரை அல்லது கருத்துரையை எழுத்து வடிவில் அரசிடம் அளிக்கலாம். மேற்சொன்ன கால அளவு முடிவடைவதற்குள் பெறப்படும் மறுப்புரைகள் அல்லது கருத்துரைகள் (எவையேனுமிருப்பின்), மேற்சொன்ன சட்டத்தின் 10—ஆம் பிரிவைச் சோர்ந்த (4) உட்பிரிவிற்கிணங்க மேற்கொண்டும் நடவடிக்கை எடுப்பதற்கு முன்னர் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். மறுப்புரைகள் அல்லது கருத்துரைகள் எழுத்துப்பூர்வமாக, 'அரசு முதன்மைச் செயலாளர், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, தலைமைச் செயலகம், புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை—600 009' என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

*[அரசாணை (நிலை) எண் 129, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி [ந.வ4—(2)]த் துறை, 24 ஜூன் 2022.]*

தமிழ்நாடு 1971ஆம் ஆண்டு நகர் ஊரமைப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 10ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவில் (b) பகுதியில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள் 10.04.1974ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II—பிரிவு 2 இல் 204ஆம் பக்கத்தில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறையின் II(2)/RUL/1994/74ஆம் எண் அறிவிக்கையில் சாத்தூர் வருவாய் கிராமத்தில் அடங்கியுள்ள சாத்தூர் உள்ளூர் திட்டமிடல் பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ள அத்தகைய பகுதியில் பின்வரும் வருவாய் கிராமங்களின் பகுதிகளைச் சேர்ப்பதற்கான அவருடைய நோக்கத்தை இதனால் அறிவிக்கிறார். அதாவது:—

| | "வருவாய் கிராமங்களின் எண் மற்றும் பெயர் |
|---|---|
| 7. | படந்தால் |
| 8. | சத்திரப்பட்டி |
| 9. | சாத்தூர்பிட்—II |
| 10. | கத்தாளம்பட்டி |
| 29. | சின்னகொல்லபட்டி |
| 33. | ஒ. மேட்டுப்பட்டி." |

2. இந்த அறிவிக்கை, ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்பட்ட நாளிலிருந்து இரண்டு திங்கள் கால அளவிற்குள் மேற்சொன்ன பகுதிகளிலுள்ள யாதொரு குடியிருப்பாளர் அல்லது யாதொரு உள்ளூர் அதிகார அமைப்பு அல்லது நிறுவனம் அவ்வாறு சேர்ப்பதற்குக் கருதப்பட்டுள்ள பகுதிகள் குறித்த யாதொரு மறுப்புரை அல்லது கருத்துரையை எழுத்து வடிவில் அரசிடம் அளிக்கலாம். மேற்சொன்ன கால அளவு முடிவடைவதற்குள் பெறப்படும் மறுப்புரைகள் அல்லது கருத்துரைகள் (எவையேனுமிருப்பின்), மேற்சொன்ன சட்டத்தின் 10ஆம் பிரிவைச் சோர்ந்த (4) உட்பிரிவிற்கிணங்க மேற்கொண்டும் நடவடிக்கை எடுப்பதற்கு முன்னர் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். மறுப்புரைகள் அல்லது கருத்துரைகள், 'அரசு முதன்மைச் செயலாளர், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, தலைமைச் செயலகம், புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை—600 009' என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

*[அரசாணை (நிலை) எண் 130, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி [ந.வ4—(2)]த் துறை, 24 ஜூன் 2022.]*

தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர் ஊரமைப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 10 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவில் (b) பகுதியில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள் 07.04.1999 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II—பிரிவு 2 இல் 220 ஆம் பக்கத்தில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் II(2)/வீ.வ.ந/408/99 ஆம் எண் அறிவிக்கையில் குளித்தலை நகராட்சியை உள்ளடக்கிய குளித்தலை உள்ளூர் திட்டமிடல் பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ள அத்தகைய பகுதியில், பின்வரும் வருவாய் கிராமங்களின் பகுதிகளைச் சேர்ப்பதற்கான அவருடைய நோக்கத்தை இதனால் அறிவிக்கிறார். அவையாவான:—

| | "வருவாய் கிராமங்களின் எண் மற்றும் பெயர் |
|---|---|
| 05. | வைகநல்லூர் பகுதி |
| 06. | மணத்தட்டை பகுதி |
| 03. | ராஜேந்திரம்.,, |

2. இந்த அறிவிக்கை, ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்பட்ட நாளிலிருந்து இரண்டு திங்கள் கால அளவிற்குள் மேற்சொன்ன பகுதிகளிலுள்ள யாதொரு குடியிருப்பாளர் அல்லது யாதொரு உள்ளூர் அதிகார அமைப்பு அல்லது நிறுவனம் அவ்வாறு சேர்ப்பதற்குக் கருதப்பட்டுள்ள பகுதிகள் குறித்த யாதொரு மறுப்புரை அல்லது கருத்துரையை எழுத்து வடிவில் அரசிடம் அளிக்கலாம். மேற்சொன்ன கால அளவு முடிவடைவதற்குள் பெறப்படும் மறுப்புரைகள் அல்லது கருத்துரைகள் எவையேனுமிருப்பின், மேற்சொன்ன சட்டத்தின் 10ஆம் பிரிவைச் சோர்ந்த (4) உட்பிரிவிற்கிணங்க மேற்கொண்டும் நடவடிக்கை எடுப்பதற்கு முன்னர் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். மறுப்புரைகள் அல்லது கருத்துரைகள் எழுத்து வடிவில், 'அரசு முதன்மைச் செயலாளர், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, தலைமைச் செயலகம், புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை—600 009' என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

**ஹிதேஸ்குமார். எஸ். மக்வானா,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர், (மொழிபெயர்ப்பு, மு.கூ.பொ),*
*தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை.*

## தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை

### அறிவிக்கைகள்

*[அரசாணை (நிலை) எண். 53, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு(I2)த் துறை, 30 மே 2022.]*

தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு உடலுழைப்புத் தொழிலாளர் (வேலைவாய்ப்பினை முறைப்படுத்தலும் பணி நிலைமைகளும்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 33/1982) 4ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், ஆலோசனைக் குழுவுடன் கலந்தாலோசித்தப்பின்னர், தமிழ்நாடு 1994ஆம் ஆண்டு உடலுழைப்புத் தொழிலாளர் (கட்டுமானத் தொழிலாளர்கள்) நலத்திட்டத்தில் இதனால் பின்வரும் திருத்தத்தினை செய்கிறார்

### திருத்தம்

மேற்சொன்ன திட்டத்தில் 16ஆம் பகுதியைச் சேர்ந்த உட்பகுதி (1)இல் உள்ள ஆண்களுக்கு ரூ.3,000/—(ரூபாய் மூன்றாயிரம் மட்டும்) மற்றும் பெண்களுக்கு ரூ.5,000/—(ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) என்னும் சொற்றொடருக்கு பதிலாக ரூ.20,000/—(ரூபாய் இருபதாயிரம் மட்டும்)" என்னும் சொற்றொடர் அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்.

*[அரசாணை (நிலை) எண். 54, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு(I2)த் துறை, 30 மே 2022.]*

தமிழ்நாடு 1982ஆம் ஆண்டு உடலுழைப்புத் தொழிலாளர் (வேலைவாய்ப்பினை முறைப்படுத்தலும் பணி நிலைமைகளும்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 33/1982) 4ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், ஆலோசனைக் குழுவுடன் கலந்தாலோசித்தப்பின்னர், தமிழ்நாடு 1994 ஆம் ஆண்டு உடலுழைப்புத் தொழிலாளர் (கட்டுமானத் தொழிலாளர்கள்) நலத்திட்டத்தில் இதனால் பின்வரும் திருத்தத்தினை செய்கிறார்.

**திருத்தம்**

மேற்சொன்ன திட்டத்தில் 11A ஆம் பகுதியைச் சேர்ந்த உட்பகுதி (1) இல் உள்ள ஆண்களுக்கு ரூ. 1,00,000/– என்னும் சொற்றொடருக்கு பதிலாக ரூ.2,00,000/– என்னும் சொற்றொடர் அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்.

*[அரசாணை (நிலை) எண். 50, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு(I2)த் துறை, 27 மே 2022.]*

மருத்துவத் தொழில் சார்ந்த பயன்பாட்டிற்கான துணி வகைகள், நாப்கின்கள் மற்றும் துணி வகைகள் ஆகியவற்றை தயாரிக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ள பணியாளர்களைப் பொறுத்த வரையில் 1948 ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 11/1948) கீழ் குறைந்தபட்ச ஊதிய வீதங்கள் நிர்ணயிக்கப்பட வேண்டும் என தமிழ்நாட்டு ஆளுநர் கருதுவதால்,

2. தற்போது மேற்சொன்ன சட்டத்தின் 27ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், மேற்கூறிய பிரிவில் தேவைப்படுகிறவாறு, மேற்சொன்ன சட்டத்திற்கான அட்டவணையின் பகுதி–1 இல் மேற்சொனன தொழிலையும் சேர்ப்பதற்கான தன்னுடைய நோக்கத்தினை இதனால் அறிவிக்கிறார்.

3. கருதப்பட்டுள்ள மேற்சொன்ன சேர்க்கையைப் பொறுத்த நேர்வில் இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து மூன்று மாதங்கள் முடிவடையும் நாளன்று அல்லது அதற்கு முன்னர், எவரிடமிருந்தேனும் யாதொரு கருத்துரை அல்லது மறுப்புரை வரப்பெறுமாயின் அதனை தமிழ்நாடு அரசு உரியவாறு பரிசீலிக்குமென்றும், இதனால் அறிவிக்கப்படுகிறது. மறுப்புரை அல்லது கருத்துரை ஏதேனுமிருப்பின், அவற்றை, சென்னை–600 006, தேனாம்பேட்டையில் உள்ள தொழிலாளர் ஆணையர் வாயிலாக அரசு செயலாளர், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை–600 009 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

*[அரசாணை (2U) எண். 31, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு(J1)த் துறை, 30 மே 2022.]*

1948ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதி, 5ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவு ஆகியவற்றில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், 21–03–2017ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசு சிறப்பிதழின்*** பாகம் II—பிரிவு 2–இல் 1 மற்றும் 2 ஆம் பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட II(2)/LE/184(g-1)/2017 ஆம் எண்ணுள்ள தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் அறிவிக்கையை ரத்து செய்துவிட்டு, அதற்குப் பதிலாகவும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், ஆலோசனைக்குழுவுடன் கலந்தாலோசித்தப் பின்னர் தமிழ்நாடு மாநிலத்தில் பந்தல் அமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளோருக்கு கீழ்க்காணும் விவர அட்டவணையின் (2) நெடும்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளை செய்கிற தொழிலாளர்களுக்கு வழங்கத்தக்க குறைந்தளவு ஊதிய வீதங்களை, அந்த விவர அட்டவணையின் (3) நெடும்பத்தியின் நிகரான பதிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இதனால் திருத்தியமைக்கிறார். இதன் வரைவு, மேற்சொன்ன சட்டத்தின் 5ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஏற்கெனவே வெளியிடப்பட்டுள்ளது.

(2) இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்பட்ட நாளிலிருந்தும், அந்நாள் முதற்கொண்டும் செயலுக்கு வரும்.

**விவர அட்டவணை**

**பந்தல் அமைக்கும் பணியில் வேலைவாய்ப்பு**

| *தொடர் எண் (1)* | *தொழிலாளர்களின் வகைகள் (2)* | *நாளொன்றுக்கு குறைந்தளவு அடிப்படை ஊதியவீதங்கள் (3)* | | | |
|---|---|---|---|---|---|
| | | *மண்டலம் "A" (ரூ.காசு)* | *மண்டலம் "B" (ரூ.காசு)* | *மண்டலம் "C" (ரூ.காசு)* | *மண்டலம் "D" (ரூ.காசு)* |
| 1. | மேற்பார்வையாளர் | 479.50 | 425.50 | 348.50 | 310.00 |
| 2. | பள்ளம் தோண்டுபவர் | 464.00 | 387.00 | 333.00 | 294.50 |
| 3. | கூரை வேய்பவர் | 448.50 | 364.00 | 317.50 | 279.00 |
| 4. | மேற்கூரை வேய்பவர்/கல்நார் / கண்ணாடி / லைட்ரூப் (Lite Roof) அமைப்பவர் | 433.00 | 356.00 | 310.00 | 264.00 |

| தொடர் எண் (1) | தொழிலாளர்களின் வகைகள் (2) | நாளொன்றுக்கு குறைந்தளவு அடிப்படை ஊதியவீதங்கள் (3) | | | |
|---|---|---|---|---|---|
| | | மண்டலம் "A" (ரூ.காசு) | மண்டலம் "B" (ரூ.காசு) | மண்டலம் "C" (ரூ.காசு) | மண்டலம் "D" (ரூ.காசு) |
| 5. | அலங்காரத் துணி கட்டுபவர் | 433.00 | 356.00 | 310.00 | 264.00 |
| 6. | மலர் அலங்காரம் செய்பவர், அலங்காரம் செய்பவர் | 418.00 | 348.50 | 294.50 | 256.00 |
| 7. | அலங்கார வளைவு (ஆர்ச்) அமைப்பவர் | 402.50 | 341.00 | 287.00 | 249.00 |
| 8. | சாமியானா நடுபவர் | 387.00 | 325.00 | 279.00 | 241.00 |
| 9. | தென்னை ஓலை பின்னுபவர் | 371.50 | 310.00 | 272.00 | 233.00 |
| 10. | கூரை அகற்றுபவர் | 356.00 | 294.50 | 264.00 | 226.00 |
| 11. | பந்தல் பொருட்களைக் கொண்டுச் செல்பவர் | 341.00 | 287.00 | 249.00 | 218.00 |
| 12. | மைக்செட்டு / சீரியல் செட்டு இயக்குபவர், மின்உற்பத்தி சாதனத்தை இயக்குபவர் | 325.50 | 279.00 | 241.00 | 210.00 |
| 13. | கூரை கொண்டு செல்பவர் மற்றும் ஒப்படைத்தவர் | 310.00 | 272.00 | 233.00 | 202.00 |
| 14. | காவலாள் | 310.00 | 272.00 | 233.00 | 202.00 |

**விளக்கங்கள்:—(1) மண்டலங்களின் வகைப்பாடு:———** மண்டலங்கள் - A,B C மற்றும் D பின்வரும் பகுதிகளைக் கொண்டிருக்கும்.

(1) மண்டலம் - A - மாநகராட்சிகள்

(2) மண்டலம் - B - நகராட்சிகள்

(3) மண்டலம் - C - பேரூராட்சிகள்

(4) மண்டலம் - D - கிராமங்கள்

(2) **அகவிலைப்படி:** மேலே நிர்ணயிக்கப்பட்ட குறைந்தளவு அடிப்படை ஊதியவீதங்களுடன், கூடுதலாக தொழிலாளர்களுக்குக் கீழே குறிப்பிட்டுள்ளவாறு அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்:—

(i) அகவிலைப்படியானது, 2010ஆம் ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் சராசரி விலைக்குறியீட்டு எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ளது, (அதாவது 2001ஆம் ஆண்டில் 100 புள்ளிகள் என்பதை அடிப்படையாகக் கொண்டு தற்போது கணக்கிடப்பட்ட 161 புள்ளிகள் ஆகும்) 161 புள்ளிகளுக்கு மேல் உயரும் ஒவ்வொரு புள்ளிக்கும் அகவிலைப்படியானது, நாளொன்றுக்கு ரூ.1.25 (ஒரு ரூபாய் மற்றும் இருபத்தைந்து காசுகள் மட்டும்) வழங்கப்பட வேண்டும்.

(ii) முந்தைய 12 மாதங்களுக்கான அதாவது ஜனவரியிலிருந்து டிசம்பர் வரை சராசரி விலைக் குறியீட்டினை அடிப்படையாகக் கொண்டு, ஒவ்வோராண்டும் ஏப்ரல் முதல் நாளன்று அகவிலைப்படி கணக்கிடப்பட வேண்டும்.

(iii) முந்தைய ஆண்டின் நுகர்வோர் விலைக் குறியீட்டு எண்ணை அடிப்படையாகக் கொண்ட அகவிலைப்படியின் முதல் கணக்கீடு இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து செயலுக்கு வரும்.

(3) பெண் தொழிலாளர்கள், அதே பணி அல்லது ஒரே தன்மையிலான பணியினை செய்யும்போது, ஆண் மற்றும் பெண் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தில் எவ்வித வேறுபாடும் இருக்கக்கூடாது.

(4) மாத ஊதியத்தைக் கணக்கிடுவதற்கு, நாள் ஊதியத்தை 30 ஆல் பெருக்க வேண்டும்.

(5) தற்போது வழங்கப்பட்டு வரும் ஊதியங்கள், இங்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தளவு ஊதியங்களைக் காட்டிலும் அதிகமாக இருக்குமிடங்களிலெல்லாம், அதே ஊதியம் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும்.

**இரா. கிர்லோஷ் குமார்,**
*அரசுச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர், (மு.கூ.பொ),*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை (2ப) எண். 57, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (J1)த் துறை, நாள் 29 ஜூன் 2022.]*

1948ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியிலும் 5ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவிலும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், 9–3–2016ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II, பிரிவு 2–இல் 169 மற்றும் 170ஆம் பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் II(2)/தொ.வே/186/2016ஆம் எண் அறிவிக்கையை ரத்து செய்துவிட்டு அதற்குப் பதிலாகவும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், ஆலோசனை குழுவுடன் கலந்தாலோசித்த பின்னர், தமிழ்நாடு மாநிலத்தில் முந்திரித் தொழிலில் பணியமர்த்தப்பட்டுள்ள கீழேயுள்ள விவரஅட்டவணையின் (2) நெடும்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பணியாளர் வகையினருக்கு வழங்கத்தக்க குறைந்தளவு ஊதிய வீதங்களை, அந்த விவர அட்டவணையின் (3) ஆம் நெடும்பத்தியின் நிகரான பதிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இதனால் திருத்தியமைக்கிறார். இதன் வரைவு, மேற்சொன்ன சட்டத்தின் 5 ஆம் பிரிவைச் சேர்ந்த, (1) உட்பிரிவின் (b) பகுதியில் கோரியுள்ளவாறாக, ஏற்கெனவே வெளியிடப்பட்டுள்ளது.

(2) இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளன்றும், அந்நாள் முதற்கொண்டும் செயலுக்கு வரும்.

**விவர அட்டவணை**

**முந்திரித் தொழிலில் வேலைவாய்ப்பு**

| *தொடர் எண்* | *பணி மற்றும் தொழிலாளர்கள் வகைகள்* | *குறைந்தளவு அடிப்படை ஊதியங்கள்* |
|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* |
| (1) | தோடு உடைத்தல் | கிலோ கிராம் ஒன்றுக்கு ரூ. 26.82 |
| (2) | தோல் உரித்தல் | கிலோ கிராம் ஒன்றுக்கு ரூ. 31.28 |
| (3) | முந்திரிப் பருப்புத் துண்டுகளில் தோல் நீக்குதல், ஒடு உடைத்தல் | கிலோ கிராம் ஒன்றுக்கு ரூ. 31.28 |
| (4) | தரம் பிரித்தல்<br>(i) உடையாத வெள்ளை பருப்புகள்<br>(ii) தீயிலிட்டுச் சுடப்பட்ட உடையாத பருப்புகள், வகைப்படுத்தப்படாத (Desert) உடையாத பருப்புகள், கட்டல், கரி முந்திரிப் பருப்புத் துணுக்குகள்<br>(iii) காரநிறம் பிருவல்<br>(iv) புழுக்குத்து, புழுக்குத்துப் பொடி, கைருவல் பொடி சுட்ட சிறு பருப்புத் துணுக்குகள்<br>(v) தீயிலிட்டுச் சுடப்பட்ட துணுக்குகள், தீயீலிட்டுச் சுடப்பட்ட தோடுகள்<br>(vi) கட்டல் துணுக்குகள் (பொடி) | விளக்கங்களின் (2) ஆம் இனத்தில் குறிப்பிட்டுள்ள வேலை ஒன்றுக்கு ரூ. 196.88 |
| (5) | வறுத்தல் | |
| (6) | போர்மா பணியாளர் | |
| (7) | எண்ணெய் பிழியும் இயந்திரம் இயக்குபவர் | நாளொன்றுக்கு ரூ. 317/– |
| (8) | தகர வேலை செய்பவர் | |
| (9) | சிப்பம் செய்பவர் | |
| (10) | (a) மைகாட் | |
| | (i) மடியினைச் சாதனையிடுவது உட்பட பல்வகைப் பணி | |
| | (ii) முந்திப்பருப்பினைச் சோதனையிடல் | நாளொன்றுக்கு ரூ. 277.00 |
| | (iii) டப்பாவில் நிரப்புபவர் (*) | |
| | (iv) சமையலாள் | |
| | (v) பெருக்குபவர்/துப்புரவுப் பணியாளர் | |
| | (*) வழக்கமான பணியுடன் டப்பாவினை நிரப்பும் பணியையும் கூடுதலாகச் செய்கின்ற டப்பாவினை நிரப்புபவருக்கு, அத்தகைய நாட்களில் மட்டும் நாளொன்றுக்கு ரூ. 12.55 கூடுதலாக வழங்கப்படவேண்டும் | |
| | (b) மேற்பார்வையிடும் மைகாட் | நாளொன்றுக்கு ரூ.305.00 |

| *தொடர் எண்* | *பணி மற்றும் தொழிலாளர்கள் வகைகள்* | *குறைந்தளவு அடிப்படை ஊதியங்கள்* |
|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* |
| (11) | மேற்பார்வையாளர்/மேஸ்திரி காவலாள் | மாதமொன்றுக்கு ரூ. 7618.00 |
| (12) | எழுத்தர்/தட்டச்சர் | மாதமொன்றுக்கு ரூ. 7565.00 |

**விளக்கங்கள்: (1)** அகவிலைப்படி: (i) மாறுகின்ற அகவிலைப்படியானது 827 என்ற டிசம்பர் –2010க்கான நாகர்கோயில் மைய நுகர்வோர் விலைக்குறியீட்டு எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ளது (அதாவது 1982=100 புள்ளிகள் என்பதை அடிப்படையாகக் கொண்டது.) 827 புள்ளிகளுக்கு மேல் உயரும் ஒவ்வொரு புள்ளிக்கும் அகவிலைப்படி நாள் ஒன்றுக்கு 33 காசுகள் (முப்பத்து மூன்று காசுகள் மட்டும்) கூடுதலாக, மாறுகின்ற அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

(ii) **மாறுகின்ற அகவிலைப்படி திருத்தமானது**, முறையே ஜூலையிலிருந்து ஜனவரியிலிருந்தும் தொடங்குகின்ற முந்தைய ஆறு திங்களுக்கான நுகர்வோர் சராசரி விலைக்குறியீட்டெண்ணை அடிப்படையாகக் கொண்டு, ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் திங்கள் முதல் நாளிலிருந்தும் அக்டோபர் திங்கள் முதல் நாளிலிருந்தும் செயலுக்க வரும்.

(iii) முதல் கணக்கீடு, மேற்சொன்ன இனம் (ii)–இல் குறிப்பிடப்பட்டுள்ள நாகர்கோயில் மையத்திற்கான நுகர்வோர் சராசரி விலைக் குறியீட்டு எண்ணை அடிப்படையாகக் கொண்டு, இந்த அறிவிக்கை, ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து செயலுக்கு வரும்.

(2) **அகவிலைப்படி வாங்குவதற்கான வரையறுக்கப்பட்ட குறைந்த அளவு பணிச்சுமை:** கீழேயுள்ள விவர அட்டவணையில் (1) நெடும்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள கீழ்க்காணும் வகைகளைச் சேர்ந்த பணிகளில் அமர்த்தப்பட்டுள்ள தொழிலாளர்கள், அந்த விவர அட்டவணையின் (2) நெடும்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள வரையறுக்கப்பட்ட பணியைச் செய்தால் மட்டுமே, மேலே நிர்ணயிக்கப்பட்டவாறான அகவிலைப்படியைப் பெற உரிமையுடையவர்கள் ஆவர்.

| *பணி வகைகள்* | *வரையறுக்கப்பட்ட குறைந்த அளவு பணிச்சுமை* |
|---|---|
| *(1)* | *(2)* |
| (1) முந்திரிப் பருப்பு ஓடு நீக்குதல் / உடைத்தல் | 6 கிலோ கிராம் |
| (2) முந்திரிப் பருப்பு தோல் நீக்குதல் | 5 கிலோ கிராம் |
| (3) முந்திரிப் பருப்புத் துண்டுகளில் தோல் நீக்குதல், ஓடு உடைத்தல் | 5 கிலோ கிராம் |
| **தரம் பிரித்தலின் பல்வேறு வகைகளைச் சேர்ந்த பணிகளைப்** பொறுத்தவரையில் பணிச்சுமை | |
| (1) உடையாத வெள்ளை பருப்புகள் | 100 கிலோ கிராம் |
| (2) தீயிலிட்டுச் சுடப்பட்ட உடையாத பருப்புகள், வகைப்படுத்தப்படாத உடையாத பருப்புகள், கட்டல், கரி, தீயிலிட்டுச் சுடப்பட்ட துணுக்குகள் | 14 கிலோ கிராம் |
| (3) கார நிறம் பிருவல் | 10 கிலோ கிராம் |
| (4) புழுக்குத்து, புழுக்குத்துப் பொடி, கைருவல் பொடி, சுட்ட சிறு பருப்புத் தணுக்குகள் | 6 கிலோ கிராம் |
| (5) தீயிலிட்டுச் சுடப்பட்ட துணுக்குகள், தீயிலிட்டுச் சுடப்பட்ட தோடுகள் | 11 கிலோ கிராம் |
| (6) கட்டல் துணுக்குகள் (பொடி) | 4 கிலோ கிராம் |

(3) பணியின் தன்மை ஒரே மாதிரியாக இருக்கும்போது, ஆண் மற்றும் பெண் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தில் எவ்வித வேறுபாடும் இருக்கக்கூடாது,

(4) (i) மாதாந்திர ஊதியத்தைக் கணக்கிடுவதற்கு நாள் ஊதியத்தை 30 ஆல் பெருக்க வேண்டும்.

(ii) நாள் ஊதியத்தைக் கணக்கிடுவதற்கு மாதாந்திர ஊதியத்தை 26 ஆல் வகுக்க வேண்டும்

(4) தற்போது வழங்கப்பட்டு வரும் ஊதியங்கள். இங்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தளவு ஊதியங்களைக் காட்டிலும் அதிகமாக இருக்குமிடங்களிளெல்லாம் அதே ஊதியம் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும்.

1948 ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3 ஆம் பிரிவுவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதி 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவு ஆகியவற்றில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு வெளியிடக் கருதிய பின்வரும் வரைவு அறிவிக்கை மேற்சொன்ன சட்டத்தின் 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியில் கோரியுள்ளவாறு, அதனால் பாதிக்கப்படகூக்டிய அனைவரின் தகவலுக்காக இதனால் வெளியிடப்படுகிறது.

2. இந்த அறிவிக்கை, தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படும் நாளிலிருந்து இரண்டு திங்கள் கால அளவு முடிவடையும் நாளன்று அல்லது அதற்குப் பின்னர் பரிசீலினைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்றும், இது தொடர்பாக மேற்சொன்ன கால அளவு முடிவடைவதற்கு முன்னர் யாதொரு நபரிடமிருந்து பெறப்படும் யாதொரு மறுப்புரை அல்லது கருத்துரையை தமிழ்நாடு அரசு பரிசீலிக்கமென்றும் இதனால் அறிவிக்கப்படுகிறது. மறுப்புரை அல்லது கருத்துரை ஏதேனுமிருப்பின், அதனை சென்னை–600 006–இல் உள்ள தொழிலாளர் ஆணையாளர் வாயிலாக அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, தலைமைச் செயலகம், சென்னை–600 009 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

**வரைவு அறிவிக்கை**

1948 ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948 3 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியிலும், 5ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவிலும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், 05–03–2019ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம்–II, பிரிவு 2 இல் 1 முதல் 6 வரையிலான பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட II(2)/தொவே/205(ന)/2019 ஆம் எண் அறிவிக்கையை ரத்து செய்துவிட்டு அதற்குப் பதிலாகவும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், தமிழ்நாட்டிலுள்ள கடைகள் மற்றும் வணிக நிறுவனங்களில் பணியமர்த்தப்பட்டுள்ள கீழ்க்காணும் விவர அட்டவணையின் (1) ஆம் நெடும்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள வகைகளைச் சேர்ந்த தொழிலாளர்களுக்கு வழங்கத்தக்க குறைந்தளவு ஊதிய வீதங்களை, அந்த விவர அட்டவணையின் (2) ஆம் நெடும்பத்தியின் நிகரான பதிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இதனால் திருத்தியமைக்கிறார்.

**விவர அட்டவணை**

**கடைகள் மற்றும் வணிக நிறுவனங்களில் வேலைவாய்ப்பு**

| *பணியாளர்களின் வகைகள்* (1) | *திங்கள் ஒன்றிற்கான குறைந்தளவு ஊதிய வீதங்கள்* (2) | | | |
|---|---|---|---|---|
| | *மண்டலம் A* | *மண்டலம் B* | *மண்டலம் C* | *மண்டலம் D* |
| | (1) | (2) | (3) | (4) |
| | *ரூ. காசு* | *ரூ. காசு* | *ரூ. காசு* | *ரூ. காசு* |
| I பொது வகையினர்: | | | | |
| (1) மேலாளர் | 7390.00 | 7328.00 | 7264.00 | 7214.00 |
| (2) விற்பனை மேலாளர் | | | | |
| (3) கள அலுவலர் | | | | |
| (4) வளர்ச்சிப் பணி அலுவலர் | | | | |
| (5) அலுவலகப் பொறுப்பாளர் | | | | |
| (6) உதவி மேலாளர் | 6880.00 | 6815.00 | 6753.00 | 6691.00 |
| (7) கணக்காளர் | | | | |
| (8) மேற்பார்வையாளர் | | | | |
| (9) விற்பனை நிருவாகி | | | | |
| (10) கொள்முதல் செய்பவர் | | | | |
| (11) பண்டகசாலைக் காப்பாளர் | | | | |
| (12) முகவர் | | | | |
| (13) விற்பனை மேம்பாட்டுப் பணியாளர்கள் | | | | |

| பணியாளர்களின் வகைகள் (1) | திங்கள் ஒன்றிற்கான குறைந்தளவு ஊதிய வீதங்கள் (2) | | | |
|---|---|---|---|---|
| | மண்டலம் A | மண்டலம் B | மண்டலம் C | மண்டலம் D |
| | (1) | (2) | (3) | (4) |
| | ரூ. காசு | ரூ. காசு | ரூ. காசு | ரூ. காசு |
| (14) காசாளர் | 6829.00 | 6753.00 | 6680.00 | 6619.00 |
| (15) எழுத்தர் | | | | |
| (16) தட்டச்சர் மற்றும் எழுத்தர் | | | | |
| (17) தட்டச்சர் | | | | |
| (18) சுருக்கெழுத்தர் | | | | |
| (19) விற்பனையாளர் | | | | |
| (20) விற்பனைப் பிரதிநிதி | | | | |
| (21) ஏலம் விடுபவர் | | | | |
| (22) வணிகத் தொழிலாளர் | | | | |
| (23) பட்டி தயாரிப்பவர் | | | | |
| (24) பட்டிக்கான தொகையை வசூலிப்பவர் | 6767.00 | 6691.00 | 6619.00 | 6553.00 |
| (25) பதிவு செய்யும் எழுத்தர் | | | | |
| (26) பட்டி எழுத்தர் | | | | |
| (27) கிடங்குக் காப்பாளர் | | | | |
| (28) உதவி விற்பனையாளர் | | | | |
| (29) கிடங்குப் பொறுப்பாளர் | | | | |
| (30) உதவிக் கணக்காளர் | | | | |
| (31) வரவேற்பாளர் | | | | |
| (32) லைன்மேன் | | | | |
| (33) சரிபார்ப்பு எழுத்தர் | | | | |
| (34) பாதுகாப்புக் காவலர் | | | | |
| (35) எடை போடுபவர் | | | | |
| (36) ஓட்டுனர் | | | | |

| பணியாளர்களின் வகைகள் (1) | திங்கள் ஒன்றிற்கான குறைந்தளவு ஊதிய வீதங்கள் (2) | | | |
|---|---|---|---|---|
| | மண்டலம் A | மண்டலம் B | மண்டலம் C | மண்டலம் D |
| | (1) | (2) | (3) | (4) |
| | ரூ. காசு | ரூ. காசு | ரூ. காசு | ரூ. காசு |
| (37) ஏவலாள் | 6691.00 | 6619.00 | 6541.00 | 6470.00 |
| (38) காவலாள் | | | | |
| (39) கடை உதவியாள் | | | | |
| (40) துணையாள் | | | | |
| (41) சிப்பம் கட்டுபவர் | | | | |
| (42) உதவியாள் | | | | |
| (43) பொருள்களை வழங்குபவர் | | | | |
| (44) செய்தியாள் | | | | |
| (45) மின்தூக்கி இயக்குபவர் | | | | |
| (46) கடைச் சிப்பந்தி | | | | |
| (47) தண்ணீர் கொடுப்பவர் | | | | |
| (48) பெருக்குபவர் | | | | |
| (49) தோட்டக்காரர் | | | | |
| (50) துப்புரவுப் பணியாளர் | | | | |
| **II. சிறப்பு வகைப் பணியாளர்கள்:** | | | | |
| (1) இராசாயன மற்றும் மருந்துப் பொருள் விற்பனைக் கடை: | | | | |
| (அ) மருந்தாளுநர் | 7390.00 | 7328.00 | 7264.00 | 7214.00 |
| (ஆ) வேதியியல் வல்லுநர் | | | | |
| (இ) மருந்து கலப்பவர் | 6829.00 | 6753.00 | 6680.00 | 6619.00 |
| **(2) முடிதிருத்தும் நிலையம் / அழகு நிலையம்:** | | | | |
| (அ) முடி திருத்துபவர் | 6880.00 | 6815.00 | 6753.00 | 6675.00 |
| (ஆ) முடி வெட்டுபவர் | | | | |
| (இ) அழகுபடுத்துபவர் | | | | |
| **(3) நிழற்படமெடுக்கும் நிலையங்கள்:** | | | | |
| (அ) நிழற்படம் எடுப்பவர் | 6829.00 | 6753.00 | 6680.00 | 6619.00 |
| (ஆ) நிழற்படக் கலைஞர் | | | | |
| (இ) உதவி நிழற்பட கலைஞர் | 6767.00 | 6691.00 | 6619.00 | 6553.00 |
| (ஈ) நிழற்பட உதவியாளர் | | | | |
| **(4) பழுது பார்க்கும் கடைகள்: (கடிகாரம்/வானொலிப் பெட்டி/மிதிவண்டி)** | | | | |
| (அ) கடிகாரம் பழுது பார்ப்பவர் | 6880.00 | 6815.00 | 6753.00 | 6991.00 |
| (ஆ) வானொலிப் பெட்டி பழுது நீக்கம் செய்பவர் / சரிபார்ப்பவர் | | | | |
| (இ) ஒலி/ஒளிக் கருவி பழுது நீக்கம் செய்பவர் / சரிபார்ப்பவர் | | | | |
| (ஈ) மிதிவண்டி பொருத்துபவர் | 6691.00 | 6619.00 | 6541.00 | 6470.00 |

| பணியாளர்களின் வகைகள் (1) | திங்கள் ஒன்றிற்கான குறைந்தளவு ஊதிய வீதங்கள் (2) | | | |
|---|---|---|---|---|
| | மண்டலம் A | மண்டலம் B | மண்டலம் C | மண்டலம் D |
| | (1) | (2) | (3) | (4) |
| | ரூ. காசு | ரூ. காசு | ரூ. காசு | ரூ. காசு |
| **(5) மூக்குக் கண்ணாடி கடைகள்:** | | | | |
| (அ) மூக்குக் கண்ணாடி பொருத்துபவர் / கண்ணாடியை அளவிற்கேற்ப அறுத்து வாங்குபவர் | 6880.00 | 6815.00 | 6753.00 | 6691.00 |
| (ஆ) ரெஃப்ராக் ஷணி பணியாளர் | | | | |
| **(6) பட அச்சுக் கட்டைத் தயாரித்தல் மற்றும் இரப்பர் முத்திரை தயாரித்தல்:** | | | | |
| (அ) செதுக்கி எடுப்பவர் | 6880.00 | 6815.00 | 6753.00 | 6691.00 |
| (ஆ) பட அச்சு கட்டைத் தயாரிப்பவர் | | | | |
| (இ) செதுக்கும் பணி உதவியாளர் | 6767.00 | 6691.00 | 6619.00 | 6553.00 |
| (ஈ) வண்ணம் பூசுபவர்/ஓவியர் | 6829.00 | 6753.00 | 6680.00 | 6619.00 |
| **(7) மின்விளக்கு, ஒலிபெருக்கி பழுதுபார்க்கும் கடை:** | | | | |
| (அ) மின் கம்மியர் / கம்பியாளர் / மின்கருவி பழுதுபார்ப்பவர் | 6829.00 | 6753.00 | 6680.00 | 6619.00 |
| (ஆ) உதவி கம்பியாளர் | 6767.00 | 6691.00 | 6619.00 | 6553.00 |
| (இ) ஒலிவாங்கி இயக்குபவர் | | | | |
| (8) நோய்குறி கண்டறிவதற்கான பரிசோதனைக் கூடம்: | | | | |
| (அ) ரேடியோகிராஃபர் | | | | |
| (ஆ) எக்ஸ்–கதிர் படமெடுப்பவர் | 6829.00 | 6753.00 | 6680.00 | 6619.00 |
| (இ) பரிசோதனைக்கூடத் தொழில்நுட்பப் பணியாளர் / பகுப்பாய்வாளர் | | | | |
| **(9) சீட்டு நிதி நிறுவனங்கள் மற்றும் கூட்டுறவுச் சங்கங்கள்:** | | | | |
| (அ) தலைமைக் கணக்காளர் | | | | |
| (ஆ) அலுவலகக் கண்காணிப்பாளர் | 6880.00 | 6815.00 | 6753.00 | 6691.00 |
| (இ) செயலாளர் | | | | |
| (ஈ) தணிக்கையாளர் | | | | |
| (உ) நேர்முக உதவியாளர் | | | | |
| (ஊ) இளநிலை வளர்ச்சி/மேம்பாட்டு அலுவலர் | 6829.00 | 6753.00 | 6680.00 | 6619.00 |
| (எ) சட்ட உதவியாளர் | | | | |
| **(10) உணவகம்-உறைவிடங்கள்:** | | | | |
| (அ) அறைப் பணியாள் | 6691.00 | 6619.00 | 6541.00 | 6470.00 |
| (அ) வாடிக்கையாளர் திரட்டுபவர் | | | | |
| (இ) கொத்தனார் | | | | |
| (ஈ) குழாய் பணியாளர் | 6829.00 | 6753.00 | 6680.00 | 6619.00 |
| (உ) வண்ணம் தீட்டுபவர் | | | | |
| (ஊ) மின் கம்மியர் | | | | |
| **(11) அறைகலன்:** | | | | |
| (அ) தச்சர் | 6880.00 | 6815.00 | 6753.00 | 6691.00 |
| (ஆ) மெருகேற்றுபவர் | | | | |

| பணியாளர்களின் வகைகள் (1) | திங்கள் ஒன்றிற்கான குறைந்தளவு ஊதிய வீதங்கள் (2) | | | |
|---|---|---|---|---|
| | மண்டலம் A | மண்டலம் B | மண்டலம் C | மண்டலம் D |
| | (1) | (2) | (3) | (4) |
| | ரூ. காசு | ரூ. காசு | ரூ. காசு | ரூ. காசு |
| (இ) பிரம்புப் பணியாளர் | | | | |
| **(12) பல்வகைப் பணியாளர்:** | | | | |
| (அ) இசைக் கருவி கடையில் உள்ள தொழில்நுட்பப் பணியாளர் | 6880.00 | 6815.00 | 6753.00 | 6691.00 |
| (ஆ) குடைகள் தயாரிப்புக் கடையில் குடையைப் பொருத்துதல், தைத்தல், கத்தரித்தல் ஆகிய பணிகளைப் புரிபவர் | | | | |
| (இ) ஆட்டோமொபைல், தானியங்கி வாகனப் பொருட்களின் விற்பனைக் கடையில் மெருகேற்றுபவர் | | | | |
| (ஈ) பயண / உடைப் பெட்டி (சூட்கேஸ்) அனைத்து வகைப் பைகள் மற்றும் பணப்பைகள் தயாரிப்பாளர்கள். (தோலினால் செய்யப்பட்டவை தவிர) | | | | |
| (உ) பெட்ரோல் பங்க் பணியாளர் | 6691.00 | 6619.00 | 6541.00 | 6470.00 |
| (ஊ) நிழற்படச் சட்டம் போடும் பணியாளர் / சட்டம் போடும் பொருட்கள் வெட்டுபவர் | 6829.00 | 6753.00 | 6680.00 | 6619.00 |
| (எ) மின்தூக்கி நிறுவும் நிறுவனங்களில் பணிபுரியும் பயிற்சி பெற்ற தொழிலாளர் | 6880.00 | 6815.00 | 6753.00 | 6691.00 |
| (ஏ) குளிர்சாதன தளவாடப் பணியாளர் | 6880.00 | 6815.00 | 6753.00 | 6691.00 |
| (ஐ) கடைகளில் பழச்சாறு மற்றும் லஸ்ஸி தயாரிப்பவர் | 6767.00 | 6691.00 | 6619.00 | 6553.00 |
| (ஒ) எவர்சில்வர், அலுமினியம் | 6829.00 | 6753.00 | 6680.00 | 6619.00 |
| பாத்திரக் கடைகளில் பெயர் பொரிப்பவர் | | | | |
| (ஓ) விறகுக்கடையில் விறகு வெட்டுபவர் | 6767.00 | 6691.00 | 6619.00 | 6553.00 |
| (ஔ) டயர்களின் அடிப்பாகத்தை மாற்றுதல், புதுப்பித்தல், டியூப்பை கந்தகமூட்டி வலுவாக்கும் கடைகளில் டயர் கிரைண்டர் புதுப்பித்தல். | 6829.00 | 6753.00 | 6680.00 | 6619.00 |
| (க) மலைப்பகுதியில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை விற்பனை செய்யும் வணிக நிறுவனங்கள், பண்டகசாலை, சேமிப்புக் கிடங்கு, இருப்பு வைக்கப்படும் அறை ஆகியவற்றில் உலரவைத்தல், இருப்பு வைத்தல், தூய்மைப்படுத்துதல், அளவிடுதல், பாரம் ஏற்றுதல் பாரம் இறக்குதல் ஆகிய பணிகளில் ஈடுபட்டுள்ள பணியாளர்கள் | 6691.00 | 6619.00 | 6541.00 | 6470.00 |

| பணியாளர்களின் வகைகள் | திங்கள் ஒன்றிற்கான குறைந்தளவு ஊதிய வீதங்கள் | | | |
|---|---|---|---|---|
| (1) | (2) | | | |
| | மண்டலம் A | மண்டலம் B | மண்டலம் C | மண்டலம் D |
| | (1) | (2) | (3) | (4) |
| | ரூ. காசு | ரூ. காசு | ரூ. காசு | ரூ. காசு |
| (கா) நிருவாகப் பணிநிலை, எழுத்துப் பணிநிலை மற்றும் மேற்சொன்ன வகைப்பாடுகள் எதிலும் சேராத பணி ஆகியவை தவிர, அனைத்துக் கடை மற்றும் வணிக நிலையங்களில் பணிபுரியும் பொதுவான பணியாளர்கள் | 6691.00 | 6619.00 | 6541.00 | 6470.00 |

**விளக்கங்கள்.**— (1) **அகவிலைப்படி.**— மேலே நிர்ணயிக்கப்பட்ட குறைந்தளவு அடிப்படை ஊதிய விகிதங்களுடன் பணியாளர்களுக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்:—

(i) அகவிலைப்படியானது, 2010 ஆம் ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் சராசரி விலைக்குறியீட்டு எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ளது (அதாவது 2010=100 புள்ளிகள் என்பதை அடிப்படையாகக் கொண்டு தற்போது கணக்கிடப்பட்ட 161 புள்ளிகள் ஆகும்). 161 புள்ளிகளுக்கு மேல் உயரும் ஒவ்வொரு புள்ளிக்கும் திங்களொன்றுக்கு ரூ.40.18 (நாற்பது ரூபாய் பதினெட்டு காசுகள் மட்டும்) கூடுதலாக அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

(ii) முந்தைய 12 மாதங்களுக்கான (அதாவது ஜனவரியிலிருந்து டிசம்பர் வரை) சராசரி நுகர்வோர் விலைக் குறியீட்டினை அடிப்படையாகக் கொண்டு, ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் முதல் நாளன்று அகவிலைப்படி கணக்கிடப்படவேண்டும்; மற்றும்

(iii) முந்தைய ஆண்டிற்கான அதாவது (ஜனவரியிலிருந்து டிசம்பர் வரை) சென்னை மாநகர சராசரி நுகர்வோர் விலைக் குறியீட்டு எண்ணை அடிப்படையாகக் கொண்ட முதல் கணக்கீடு, இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து செயலுக்கு வரும்.

**(2) வகைப்படுத்தப்பட்ட மண்டலங்கள் பற்றிய விவரம் வருமாறு:-**

**(i) மண்டலம் - A:**

மாநகராட்சிகள் மற்றும் சிறப்பு நிலை நகராட்சிகள் ஆகியவை இதில் அடங்கும்.

**(ii) மண்டலம் - B:**

சிறப்புநிலை நகராட்சிகள் நீங்கலாக ஏனைய நகராட்சிகள் அனைத்தும் இதில் அடங்கும்

**(iii) மண்டலம் - C:**

நகரியங்கள், பேரூராட்சிகள், பாளையங்கள் அனைத்தும் இதில் அடங்கும்

**(iv) மண்டலம் - D:**

A, B மற்றும் C ஆகிய மண்டலங்களில் குறிப்பிட்டுள்ள அனைத்துப் பகுதிகள் நீங்கலாக ஏனைய அனைத்துப் பகுதிகளும் இதில் அடங்கும்.

(3) பனியின் தன்மை ஒரே மாதிரியாக இருக்கும்போது ஆண் மற்றும் பெண் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தில் எவ்வித வேறுபாடும் இருக்கக்கூடாது.

(4) நாள் ஊதியத்தைக் கணக்கிடுவதற்கு மாதாந்திர ஊதியத்தை 26 ஆல் வகுக்க வேண்டும்.

(5) தற்போது வழங்கப்பட்டு வரும் ஊதியங்கள், இங்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தளவு ஊதியங்களைக் காட்டிலும் அதிகமாக இருக்குமிடங்களிலெல்லாம் அதே ஊதியம் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும்.

*அரசாணை (2ப) எண் 60, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (J1)த், 8 ஜூலை 2022*

1948 ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3ஆம் பிரிவுவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதி மற்றும் 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவு, மற்றும் 3 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின் (c) பகுதியில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், 11—01—2017 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II பிரிவு 2 இல் 23 மற்றும் 24 ஆம் பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் II(2)/தொ.வே.வா/28/2017 ஆம் எண் அறிவிக்கையை இரத்து செய்துவிட்டு, அதற்குப் பதிலாகவும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள். ஆலோசனைக் குழுவுடன் கலந்தாலோசித்தப் பின்னர், தமிழ்நாடு மாநிலத்தில் உள்ள புகையிலை தயாரிப்புத் (பீடி சுற்றுதல் நீங்கலாக பீடி தயாரித்தல் உட்பட) தொழிலில் ஈடுபட்டள்ள கீழேயுள்ள விவர அட்டவணையின் நெடும்பத்தி (1) இல் குறிப்பிடப்பட்டுள்ள வகையைச் சேர்ந்த தொழிலாளர்களுக்கு வழங்கத்தக்க குறைந்ததளவு ஊதிய வீதங்களை, அதன் (2) ஆம்

நெடும்பத்தியின் நிகரான பதிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இதனால் திருத்தியமைக்கிறார். இதன் வரைவு மேற்சொன்ன சட்டத்தின் 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியில் கோரியுள்ளவாறு ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ளது.

(2) இந்த அறிவிக்கை, ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்தும், அந்நாள் முதற்கொண்டும் செயலுக்கு வரும்

**விவர அட்டவணை**

**புகையிலை தயாரிப்புத் (பீடி சுற்றுதல் நீங்கலாக பீடி தயாரிப்பு உட்பட) தொழிலில் வேலைவாய்ப்பு**

**வேலைவாய்ப்பு**

| *தொழிலாளர் வகைகள்* | *குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்கள்* *(மாதமொன்றுக்கு)* *(ரூ.காசு)* |
|---|---|
| (1) | (2) |
| (1) மேலாளர் | 9384.00 |
| (2) கணக்காளர்/கணினி இயக்குபவர் | 9054.00 |
| (3) எழுத்தர்/தட்டச்சர்/ விற்பனையாள் | 8724.00 |
| (4) சேகரிப்பவர் | 8559.00 |
| (5) சரிபார்ப்பவர்/மேஸ்திரி/ வகைப்படுத்துபவர்/ கண்காணிப்பாளர் | 8394.00 |
| (6) இலைத்தூள் வழங்குபவர்/பை தைப்பவர்/சிப்பமாக்குபவர் | 8229.00 |
| (7) அலுவலக உதவியாள்/ஏவலாள் | 8229.00 |
| (8) ஓட்டுநர் (டிரக்/லாரி) | 8229.00 |
| (9) ஓட்டுநர் (சீருந்து/வேன்) | 8064.00 |
| (10) காவலாளி | 7404.00 |
| (11) தூய்மை பணியாளர்/பெருக்குபவர் | 6909.00 |
| (12) ஏனைய தொழிலாளர்கள் | 6909.00 |

**பீடி கட்டுகளுக்கேற்ப ஊதியங்கள்:**

(1) 4000 கட்டுகளின் மீது லித்தோ உறைகளுக்கு .. நாளொன்றுக்கு ரூ.318.75 பெயர்ச்சீட்டு ஒட்டுதல்

**விளக்கங்கள்:**

(i) ஒவ்வொரு கட்டும் 25 பீடிகளைக் கொண்டது.

(ii) கட்டு ஒன்றுக்கு 10, 15 அல்லது 20 பீடிகள் கொண்ட கட்டுகளுக்கு பெயர்ச்சீட்டு ஒட்டுவதற்கு வீதப்படியான ஊதியங்கள் வழங்கப்பட வேண்டும்

(iii) "மேல் பெயர்ச்சீட்டு ஒட்டுவதற்கு" 30% மிகை ஊதியம் வழங்கப்பட வேண்டும். அதற்கு அகவிலைப்படியும் வழங்கப்பட வேண்டும்.

(2) வளைய பெயர்ச்சீட்டு ஒட்டு 1000 பீடிகளுக்கு ரூ 12.75

(வளையபெயர்தல் சீட்டு ஒட்டுவதற்கு பசையும் நூலும் நிருவாகத்தால் வழங்கப்பட வேண்டும்.)

ஒரு நாள் வேலை என்பது நாளொன்றுக்கு 10,000 பீடிகள் தயாரிப்பதாகும்.

**விளக்கங்கள்: (1) அகவிலைப்படி:** மேலே நிர்ணயிக்கப்பட்ட குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்களுடன் கூடுதலாக, தொழிலாளர்களுக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்:–

(i) அகவிலைப்படியானது 2010 ஆம் ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் சராசரி விலைக்குறியீட்டு எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ளது (அதாவது 2001 ஆம் ஆண்டில் 100 புள்ளிகள் என்பதை அடிப்படையாகக் கொண்டு தற்போது கணக்கிடப்பட்ட 161 புள்ளிகள்). 161 புள்ளிகளுக்கு மேல் உயரும் ஒவ்வொரு புள்ளிக்கும் அகவிலைப்படியாக திங்கள் ஒன்றுக்கு ரூ.42.90 (நாற்பத்தி இரண்டு ரூபாய் தொண்ணூறு காசுகள் மட்டும்) கூடுதலாக வழங்கப்பட வேண்டும்.

(ii) முந்தைய 12 மாதங்களுக்கான (அதாவது ஜனவரியிலிருந்து டிசம்பர் வரை) சராசரி விலைக் குறியீட்டினை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொராண்டும் ஏப்ரல் முதல் நாளில் அகவிலைப்படி கணக்கிடப்படவேண்டும்.

(iii) முந்தைய ஆண்டிற்கான சென்னை மாநகர சராசரி நுகர்வோர் விலைக் குறியீட்டு எண்ணை அடிப்படையாகக் கொண்ட முதல் கணக்கீடு. இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து செயலுக்கு வரும்.

(2) பணியின் தன்மை ஒரே மாதிரியாக இருக்குபோது ஆண் மற்றும் பெண் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தில் எவ்வித வேறுபாடும் இருக்கக்கூடாது.

(3) நாள் ஊதியத்தைக் கணக்கிடுவதற்கு மாதாந்திர ஊதியத்தை 26—ஆல் வகுக்க வேண்டும்

(4) மாதாந்திர ஊதியத்தைக் கணக்கிடுவதற்கு நாள் ஊதியத்தை 30—ஆல் பெருக்க வேண்டும்.

(5) தற்போது வழங்கப்பட்டு வரும் ஊதியங்கள், இங்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தளவு ஊதியங்களைக் காட்டிலும் அதிகமாக இருக்குமிடங்களிலெல்லாம் அதே ஊதியம் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும்.

**முகமது நசிமுத்தின்**
*அரசு கூடுதல் தலைமை செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர், (மு.கூ.பொ),*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை ஆணையரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.